செ.வெ.எண்: 766 நாள் : 22.11.2020

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பாக நடைபெறும் சிறப்பு முகாம்களை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பாக நடைபெறும் சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று (22.11.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளவாறு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளிலும், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல், திருத்தம் செய்தல் தொடர்பான சிறப்பு முகாம்கள் நேற்று மற்றும் இன்று(22.11.2020) நடைபெறுகிறது. அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியலை சரி பார்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், திருவிடைமருதூர் வட்டம் திருபுவனம் அரசு மேல்நிலைப்பள்ளி, திருவாடுதுறை ஆதினம் மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம் வட்டம் உள்ளூர் ஊராட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சிறுமலர் மேல்நிலைப்பள்ளி, தாராசுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, பாபநாசம் வட்டம் கோவிந்தசாமி மூப்பனார் உயர்நிலைப் பள்ளி, மணி மெட்ரிக் உயர்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான சிறப்பு முகாம்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பெயர் சேர்க்க, நீக்கம் செய்ய மற்றும் திருத்தம் செய்ய வந்த பொது மக்களிடம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து, உரிய விண்ணப்ப படிவங்களை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது கும்பகோணம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.விஜயன், தமிழ்நாடு வாணிப கழக மாவட்ட மேலாளர் திரு.அழகர்சாமி, திருவிடைமருதூர் வட்டாட்சியர் திரு.பாலசுப்ரமணியன், கும்பகோணம் வட்டாட்சியர் திரு.கண்ணன், பாபநாசம் வட்டாட்சியர் திரு.முருகவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர், திருப்புறம்பியம் ஊராட்சி இன்னம்பூர் பழவாறு மதகு அருகே நடைபெற்ற ஆகாயத்தாமரை அகற்றும் பணியினை நேரில் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆகாயத் தாமரையை முழுமையாக அகற்றிடவும், பழவாற்றில் உள்ள 9 மதகுகளில் எந்தவிதமான அடைப்புமில்லாமல் தண்ணீர் செல்லும் வகையில் பணிகளை மேற்கொள்ளுமாறு பொதுப்பணித்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். தொடர்ந்து, பாபநாசம் வட்டம் கபிஸ்தலத்தில் காவிரி அரசலாறு தலைப்பு மற்றும் மண்ணியாறு தலைப்பு பகுதிகளில் வெள்ள தடுப்பு பணிகளுக்கு மணல் மூட்டைகள், சாக்குப் பைகள், சவுக்கு கம்புகள் ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மரம் அறுக்கும் இயந்திரங்களை செயல்படுத்தி பார்வையிட்டார்.

---

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.